**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(நாட்டு நலப்பணித்திட்டம்)**
**செயல்முறைகள், சென்னை – 06**

ந.க.எண்.058662/எல்/இ1/2025 நாள்08.09.2026

பொருள் : தமிழ்நாடு–பள்ளிக் கல்வி – நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) – 2026–2027ஆம் ஆண்டிற்கான – அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகள் – கூடுதல் நாட்டு நலப்பணித்திட்டம்(NSS Units) அலகுகளின் தேவை குறித்த விவரங்கள் (Google Form)–இல் பதிவேற்றம் செய்தல் – சார்பு.

பார்வை : நாட்டு நலப்பணித் திட்ட மண்டல இயக்குநரின் கடித எண்.F.No.2–125/2026–27/RD–NSS/NSS Units–2001–2060 நாள்.02.09.2026.

--------

பார்வையில் காணும் கடிதத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதலாகத் தேவைப்படும் நாட்டு நலப்பணித் திட்ட (NSS Units) அலகுகளின் எண்ணிக்கை விவரங்களைப் பெற்று அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தங்களது நிர்வாக எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் NSS அலகுகள் தேவைப்படும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு இச்செயல்முறைகளை உடனடியாகத் தெரிவித்து, கீழே வழங்கப்பட்டுள்ள Google Form–ல் உரிய விவரங்களை முழுமையாகப் பதிவு செய்ய அறிவுறுத்த வேண்டும்.

மேலும், Google Form–இல் பள்ளியின் பெயர் மற்றும் முகவரி தற்போது செயல்படும் NSS அலகுகளின் எண்ணிக்கை, கூடுதலாகத் தேவைப்படும் அலகுகளின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்பு விவரங்கள் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் பள்ளித் தலைமை ஆசிரியரால் சரிபார்க்கப்பட்ட பின்னரே பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்படும் விவரங்கள் உண்மையான தேவை மற்றும் பள்ளிப் பதிவேடுகளுடன் ஒத்ததாக இருப்பதை சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும்.

மேற்கண்ட விவரங்கள் Google Form–இல் 05.10.2026–க்குள் பதிவு செய்யப்பட வேண்டும். காலக்கெடுவிற்குப் பின்னர் பெறப்படும் விவரங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. நடைமுறையிலுள்ள NSS வழிகாட்டு நெறிமுறைகள், தகுதி, நிதி ஒதுக்கீடு மற்றும் உரிய அதிகாரியின் ஒப்புதல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே கூடுதல் அலகுகள் பரிசீலிக்கப்படும்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளின் தேவைகள் மட்டும் பதிவுசெய்யப்பட வேண்டும். இச்செயல்முறைகள் மீது உடனடி தனிக்கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: **Google Form** : https://forms.gle/WMScuJDUJPt1kuwv5

இணை இயக்குநர்

பெறுநர்:

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:

நாட்டு நலப்பணித் திட்ட மண்டல இயக்குநர், அவர்களுக்கு

சாஸ்திரிபவன், நுங்கம்பாக்கம்,

சென்னை–06, தகவலுக்காக அனுப்பப்படுகிறது.